

ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் டி.புதுப்பட்டியில் புதிய நியாயவிலைக் கடை கட்டுவதற்காக அடிக்கல் நாட்டி அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டு பணிகளை துவக்கி வைத்தார். அருகில் திண்டுக்கல் எம்.பி.ப.வேலுச்சாமி, மாவட்ட திட்ட இயக்குநர் பெ.திலகவதி, ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, மாவட்ட தி.மு.க. பொருளாளர் குசத்தியமூர்த்தி உட்பட தி.மு.க. நிர்வாகிகள் பலர் உள்ளனர்.





தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில் சுமார் 66 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உலக தரத்தில் கட்டப்பட்டுள்ள பிரமாண்ட ஜல்லிக்கட்டு கலையரங்கத்தை திறந்து வைக்க வருகை தரும் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை ஒரு லட்சம் பேர் திரண்டு வரவேற்பு கொடுப்பது, வரும் 21ஆம் தேதி சேலத்தில் நடைபெறவுள்ள இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாட்டில் பல்லாயிரக்கணக்கில் பங்கேற்பது குறித்து நடைபெற்ற மதுரை வடக்கு மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரை யாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் ஆ.வெங்கடேசன், எம்.எல்.ஏ., எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன், சோமசுந்தரபாண்டியன், நேரு பாண்டியன், புதூர் சேகர், வடிவேல் முருகன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் உள்ளனர்.

### கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பிறந்த நாள்! காரைக்குடியில்

# துப்புரவுப் பணியாளர்கள் 40 பேருக்கு இனிப்புகள் - சீருடைகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்கினார்!

காரைக்குடி, ஜன.9-

சிவகங்கை மாவட்ட மகளிர் தொண்டர் அணி சார்பாக கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் - கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் தலைமையில் , மாநில இலக்கிய அணிப் புரவலர் தென்னவன், காரைக்குடி நகர்மன்றத் தலைவர் முத்துதுரை, நகரச் செயலாளர் காரைக்குடி நகர்மன்றத் துணைத் தலைவர் குணசேகரன் ஆகியோர் முன்னிலையில் சென்னை மற்றும் தூத்துக்குடி பேரிடர் காலங்களில் தூய்மைப் பணிகளை மேற்கொண்ட காரைக்குடி நகரில் இருந்து சென்ற துப்புரவு பணியாளர்கள் 40 பேருக்கு கௌரவிக்கும் விதமாக அவர்களுக்கு கனிமொழி கருணா நிதி. அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு இனிப்புகள் மற்றும் சீருடைகள் வழங்கி கவுரவிக்கப் பட்டது. மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ஹேமா செந்தில் ஏற்பாட்டில் நடைபெற்ற இந் நிகழ்ச்சியில் பொதுக்குழு உறுப்பினர் தெய்வானை இளமாறன், மாவட்ட மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் குழந்தை தெரசாள், சகோதரிகள் தமிழ்ச்செல்வி, ஒமேகா திலகவதி, நிர்மலா செல்வம், புகழேந்தி,மற்றும் ஜெயந்தி, தகவல் தொழில் நுட்ப அணி கலாக்காசிநாதன் எம்.சி., ஒன்றிய துணைச் செயலாளர் சகோதரி சத்யா, சுற்றுச்சூழல் அணி சகோதரி காஞ்சனா மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர்.

### தூத்துக்குடியை தொழில் நகரமாக மாற்றும் நடவடிக்கையில் திராவிட மாடல் அரசு!

# இளைய சமுதாயம் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, ஜன. 9-

உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் சிறப்பம்சமாக தென் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலாக தூத்துக்குடியை அடுத்த கட்ட தொழில் நகரமாக மாற்றும் நடவடிக்கைகளை எடுத்து வரும் திராவிட மாடல் அரசு இளைய சமுதாயம் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது என ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.

அது வருமாறு:-

உலக அளவிலான முதலீட்டாளர்களை வரவேற்கும் மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. நாட்டில் அதிகப் பொருளாதாரம் கொண்ட 2வது பெரிய மாநிலம் தமிழ்நாடு. பல்வேறு தொழில் பிரிவுகளில் தமிழ்நாடு முதலிடம் வகிக் கிறது. 45 ஆயிரம் தொழிற்சாலைகள் இங்கு இருக்கின்றன. இதன் எண்ணிக்கையையும் முதலீட்டையும் மேலும் பன்மடங்காக அதிகரிப்பதன் மூலம் 2030ம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார மாநிலமாக மாற்றுவதற்கான இலக்கை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிர்ணயித்துள்ளார். இதற்காக தொழில்துறையில் பல்வேறு பிரிவுகளில் முதலீடுகளை ஈர்க்கும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாக சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நேற்றும் இன்றும் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெறுகிறது. மாநாட்டில் 50 நாடுகளில் இருந்து 450க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள், தமிழ்நாட்டின் முன்னணி தொழிலதிபர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



தினகரன்

பெரும் பாய்ச்சல்

மாநாட்டின் முதல் நாளிலேயே முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 5.5 லட்சம் கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன் மூலம் சுமார் 1 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. தமிழ்நாடு குறைக் கடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுக் கொள்கை, 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் இலக்கினை எய்துவதற்கான செயல்திட்ட அறிக்கை ஆகியவற்றை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து, க்வால்காம் டிசைன் சென்டர் மற்றும் பஸ்ட் சோலார் நிறுவனங்களின் திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, கோத்ரேஜ் நிறுவனத்தின் புதிய திட்டத்துக்கு அடிக்கல் நாட்டினார்.

இந்த 2 நாள் மாநாட்டில் மூலதனம் நிறைந்த மின்னணு பொருட்கள் உற்பத்தி, மின்சார வாகனங்கள், சோலார் பி.வி. செல்கள் உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், பெட்ரோலிய பொருட்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறைகள், ஜவுளி மற்றும் ஆடைகள், காலணிகள் மற்றும் தோல் பொருட்கள், உணவு பதப்படுத்துதல் போன்ற வேலைவாய்ப்பு நிறைந்த துறைகளில் புரிந்துணர்வுகள் மேற்கொள்ளப் பட இருக்கிறது.

இந்த மாநாட்டின் மற்றொரு சிறப்பம்சமாக தென்தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலாக தூத்துக்குடியில் 16 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் 400 ஏக்கரில் வின்பாஸ்ட் தொழிற்சாலை அமைகிறது. வியட்நாமைச் சேர்ந்த பன்னாட்டு மின்வாகன தயாரிப்பு நிறுவனம் தூத்துக்குடியில் மின்சார கார் மற்றும் மின்சார வாகனங்களுக்கான பேட்டரி தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்க உள்ளது. இதன் கட்டுமானம் நடப்பாண்டிலேயே துவங்கும் என்ற அறிவிப்பு தென்மாவட்ட மக்களின் காதில் தேனாக பாய்ந்துள்ளது. துறைமுகம், விமான நிலையம், தரமான 4வழிச்சாலைகள் என போக்குவரத்து வசதிகள் அனைத்துமிருந்தும் தென்மாவட்டங்களில் பெரியளவில் தொழில் முதலீடுகள் ஏதும் வராமலிருந்த நிலையில் திராவிட மாடல் அரசு தூத்துக்குடியை அடுத்தகட்ட தொழில் நகரமாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருவது இளைய சமுதாயம் மத்தியில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. ஏற்கனவே பர்னிச்சர் பூங்கா, விமான நிலைய விரிவாக்கம் போன்ற பணிகள் நடந்து வரும் நிலையில் ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரிப்பதால் இனி தென்மாவட்டங்களில் உள்ள வறண்ட தரிசு நிலங்களெல்லாம் புதிய தொழிற்பூங்காக்களாக மாறும் என்ற நம்பிக்கை ஒளி தோன்றுகிறது. இதற்கு இதுபோன்ற தொழில் முதலீட்டு மாநாடுகள் நிச்சயம் உரமேற்றும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சீத்தா வேதநாயகம்**
**சனவரி 9 (2019)**



கழகக் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்டு, பள்ளிப் பருவத்திலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

புதுச்சேரி மாநிலத்தில், பகுதிச் செயலாளர், துணைத் தலைவர், மாநிலக் கழகப் பொருளாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர், மாநில அவைத்தலைவர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

புதுச்சேரி நகர்மன்ற உறுப்பினராக மூன்று முறையும் – சட்டமன்ற உறுப்பினராக இரண்டு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

புதுச்சேரியில் பல்வேறு கூட்டுறவு சங்கங்களின் தலைவராகவும் – துணைத் தலைவராகவும் பதவி வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### சிவகங்கை நகராட்சியில் 2017 முதல் குடிநீர் கட்டணம் உயர்வு!

# அரசியல் காழ்ப்புணர்ச்சியினால் அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்!

## சிவகங்கை நகர்மன்றத் தலைவர் துரை ஆனந்த் பேட்டி!

சிசிவகங்கை, ஜன.9-

சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை ஆனந்த் சிவகங்கையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

வருகிற 12ம்தேதி அ.தி.மு.கவினர் குடிநீர் கட்டண உயர்வு, வீட்டு வரி உயர்வு, குப்பை கிடங்கு இடம் தொடர்பாக பல்வேறு பிரச்சினை குறித்து ஆர்ப்பாட்டம் நடத்துவதாக எடப்பாடி பழனிச்சாமி அறிவித்துள்ளார். இது முற்றிலும் காழ்ப்புணர்ச்சியுடன் அரசியல் விளம்பரத்திற்காக நடத்தப்படுகிறது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் சிவகங்கை நகராட்சிக்கு பல்வேறு திட்டங்களை அறிவித்து அதற்கான நிதியாக ரூபாய் 25 கோடியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது தவிர சுமார் 73.25 லட்சத்தில் கலைஞர் நூற்றாண்டு தோரணவாயில் அமைத்தல், புதிதாக நகராட்சி கட்டிடம் கட்டுதல், நகரில் விடுபட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடை அமைத்தல், உட்பட பல்வேறு பணிகளை மேற்கொள்ள ரூபாய் 73கோடியே 22லட்சத்து 90ஆயிரம் மதிப்பீட்டில் புதிய திட்டங்கள் செயல்படுத்திட அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சியை விரிவுபடுத்தும் வகையில் கீழ வாணியண் குடி, சூரக்குளம் காஞ்சிரங்கால் ஆகிய ஊராட்சிகளை சிவகங்கை நகராட்சியுடன் இணைப்பதற்கான தீர்மானம் நகர் மன்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு அரசின் பரிந்துரைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதற்காக அரசின் சார்பில் ஒரு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் மாவட்ட கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்நேரு பல்வேறு திட்ட பணிகளை நகராட்சிக்கு அனுமதித்து அதற்கான நிதி ஒதுக்கீடும் செய்துள்ளார். அதற்கான பணிகள் நடைபெற்று முடிவடையும் நிலையில் உள்ளது. முன்னாள் அமைச்சர் பாஸ்கரன் அமைச்சராக இருந்த பொழுது சிவகங்கை கௌரிவினா யகர் ஆலயத்திற்கு சொந்தமான இடத்தினை ஆக்கிரமிப்பு செய்திருந்தார். இது குறித்து ஆதாரத்துடன் நான் புகார் கொடுத்ததின் பேரில் கழக ஆட்சி வந்ததும் அந்த நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகள் இந்துசமய அறநிலையத்துறையால் மீட்கப்பட்டது. இந்த அரசியல் காழ்ப்புணர்ச்சியால் தற்பொழுது அ.தி.மு.க. இத்தகைய ஆர்ப்பாட்டத்தினை அறிவித்துள்ளார்கள்.

கடந்த இரண்டரை ஆண்டுகளாக சிவகங்கை நகரில் நல்ல முறையில் நிர்வாகம் செய்து கொண்டிருக்கும்மக்கள் நலப்பணிகளில் செயலாற்றி வரும் நகராட்சி நிர்வாகத்தை குறைகூற முடியாததால் சுயலாபத்திற்காக ஆர்ப்பாட்டம் என்று அறிவித்துள்ளார்கள். இது முற்றிலும் அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக அரசியல் ஆதாயத்திற்காக நடத்தப்படும் ஆர்ப்பாட்டமாகும். குடிநீர் மாதம் கட்டண உயர்வு என்று குறிப்பிட்டுள் ளார்கள். கடந்த 2017 ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின்போது அப்போதைய ஆணையால் குடிநீர் கட்டணம் உயர்த்தலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி அரசிற்கு அனுப்பப் பட்டுள்ளது. அந்த தீர்மானத்தில் குடிநீர் கட்டண வைப்பு தொகை ரூபாய் 5ஆயிரத்திலிருந்து ரூபாய் 6000 வகையிலும், வீட்டு உபயோகத்திற்கு மாதம் ரூபாய் 100 லிருந்து 200என்றும், வணிக உபயோகத்திற்கு மாதம் ரூபாய் 255 லிருந்து 400 என்றும், தொழிற்சாலைக்கு ரூபாய் 255லிருந்து 600என்று உயர்த்தலாம் என்று தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப் பப்பட் டுள்ளது. தொடர்ந்து அரசின் பரிசீலனை யிலிருந்து அரசின் அறிவிப்பினால் வீட்டு உபயோக குடிநீர் கட்டணம் மாதம் ரூ.200 என்றும், வணிக உபயோகத்திற்கு ரூபாய் 255லிருந்து ரூபாய் 300ஆகமட்டும் உயர்த்தப் பட்டது. இது தவிர வருடம் தோறும் ஏப்ரல் மாதம் முதல் 5% சதவீதம் குடிநீர் கட்டணம் உயர்த்த வேண்டும் என்று அப்போதைய அ.தி.மு.க.

அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. நகர் மக்களின் சூழ்நிலை கருதி குடிநீர் கட்டண உயர்வுகளை சிவகங்கை நகர் மன்றம் நிறைவேற்றவில்லை. இது தவிர 2017 ஆம் ஆண்டு முதல் காவிரி குடிநீர் கூட்டு திட்டத்திற்கு 3கோடியே 36 ஆயிரத்து 845 58 ரூபாய் பாக்கி வைத்து சென்றனர்¬. இதை புதிய நகர்மன்றம் இரண்டரை ஆண்டுகளில் இரண்டு தவணைகளில் ரூபாய் ஒரு கோடி பாக்கி பணத்தினை செலுத்தி உள்ளோம். சிவகங்கை நகரில் குடிநீர் கட்டணம் அதிக அளவி ரூபாய் 1கோடியே33 லட்சம் பாக்கி உள்ளது.

அவர்களிடம் இருந்துவசூலிப்பதற்காக நடவடிக்கைகள் தீவிர படுத்தப்பட்டு உள்ளது. இதுதவிர இடைக்காட்டுர் குடிநீர் திட்டத்திற்காக ஆண்டிற்கு ரூபாய் 4 கோடியே 93 லட்சத்து 90ஆயிரத்து 636 செலுத்த இதில்குடிநீர் பராமரிப்பு பணியாளர்கள் சம்பளம் மின்கட்டணம் உட்பட பல்வேறு வகைகளில் செலவழிக்கப்படுகிறது. குப்பைக் கிடங்கிற்கு மாவட்ட ஆட்சியரிடம் தொடர்ந்து வலியுறுத்தி கூட்டுறவு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் மூலம் இடம் தேர்வு செய்து தருமாறு மாவட்ட ஆட்சியர் சிவகங்கை வட்டாட்சியருக்குபரிந்துரை செய்துள்ளார்.

சிவகங்கை வட்டாட்சியரும் நகர் மற்றும் சுற்றுப்புற இடங்களில் ஆய்வு மேற்கொண்டு வருகிறார். விரைவில் குப்பை கிடங்கிற்கான இடம் தேர்வு செய்யப்படும். எனவே இத்தகைய நிலையில் அ.தி.மு.க.ஆட்சியில் குடிநீர் கட்டண உயர்வினை நிறைவேற்றியவர்கள் இதற்காக ஆர்ப்பாட்டம் நடத்துவது மக்களை ஏமாற்றும் செயல் ஆகும். இது போன்ற பல்வேறு பிரச்சினைகள் அவர்கள் காலத்தில் ஏற்பட்டதாகும். 10 ஆண்டுகளில் அ.தி.மு.க. அமைச்சராக இருந்த பாஸ்கரன் அல்லது அ.தி.மு.க.வினரோ சிவகங்கை நகருக்கு உருப்படியான பெயர் சொல்லும் வகையில் எந்த ஒரு திட்டமும் நிறைவேற்றப் படவில்லை. தற்பொழுது கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் பொற்கால ஆட்சியில் மாவட்ட தலைநகருக்கு கிடைக்கும் அந்தஸ்தினை பொறுத்து கொள்ளமுடியவில்லை.

அரசியல் சுய லாபத்திற்காக வேண்டுமென்று இத்தகைய ஆர்ப்பாட்டத்தினை நடத்துகிறார்கள்

எனவே இந்த ஆர்ப்பாட்டத்தினை சிவகங்கை நகர் மக்கள் பொருட்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு துரைஆனந்த் தெரிவித்தார்.

### திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எம்.ஏ. காதர்**
**சனவரி 9 (2011)**



இளமைப் பருவம் முதலே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றி வந்த இவர், 1967ஆம் ஆண்டு மண்டபம் நகரக் கழகச் செயலாளராகவும் – 1983ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டக் கழகப் பொருளாளராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்தவர்.

பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக நான்கு முறையும் – பொதுக்குழு உறுப்பினராக இரண்டு முறையும் பொறுப்பு வகித்து, இறுதியில் சொத்துப் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

1967ஆம் ஆண்டு மண்டபம் ஊராட்சிமன்றக்குழுத் தலைவராகவும் – 1996ஆம் ஆண்டு இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவராகவும் – 1998ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**